சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 15.10.2024

PW1:கணேசமூர்த்தி த/பெ– ராமசாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

நான் எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதியின் கிரைய பத்திரத்தையும், வில்லங்க சான்றிதழையும் நான் படித்து பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதியின் கிரைய பத்திரத்தை பார்க்காமல் எதை வைத்து முடிவுக்கு வந்தேன் என்றால் நான் ஞாபகமில்லை என்று தான் சொன்னேன். எனது கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.3 ல் 1ம் பிரதிவாதி 5 லக்க சொத்துக்களை கிரையம் வாங்கியதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5ம் லக்க சொத்தின் சர்வே எண்.32/3 விஸ்தீரணம் 1 ஏக்கர் 42 செண்ட் என்று வா.சா.ஆ.3 ல் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் 5 வது லக்க சொத்திற்கு நான்குமால்களாக கிழக்கே - 32/4 நாகராஜன் கிரையம் பெற்ற நிலம், தெற்கே - சர்வே எண் 32/6 புஞ்சையும், மேற்கே - சர்வே எண்.32/2 வேலுச்சாமி நாயக்கர் நிலமும், வடக்கே - பட்டம்புதுார் கிராம எல்லையாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் தாவா சொத்தின் சர்வே எண். 32/3 ன் விஸ்தீரணம் ஏக்கர் 2 செண்ட் 52 ல் வடபுறம் ஏக்கர் 1 செண்ட் 70 ஆக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் உள்ள சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ள அளவுகளும், வா.சா.ஆ.3 ல் கூறப்பட்டுள்ள சொத்து விபர அளவுகள் வேறு என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் கூறப்பட்டுள்ள 5ம் அயிட்ட சொத்திற்கான நான்கு மாலும், பிராதில் கூறப்பட்டுள்ள சொத்திற்கான நான்கு மாலும் வேறாக உள்ளது

என்றால் ஞாபகமில்லை. பிராதில் சொத்தின் நான்குமாலாக ராக்கம்மாள் புஞ்சைக்கு -தெற்கு, சுப்பாநாயக்கர் புஞ்சைக்கு -கிழக்கு, கோபால்நாயக்கர் புஞ்சைக்கு -மேற்கு, ராஜம்மாள் கிரைய நிலத்திற்கு -வடக்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பிராது சொத்து பூமியில் இல்லை என்றும், நான் தவறுதலாக 1ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 07.10.1985ம் தேதியில் ராமசாமி நாயக்கர் கிரையம் வாங்கிய பிறகு பட்டா மாறுதல் செய்யவில்லை. ராமசாமி நாயக்கர் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவர் உயிருடன் இருந்த போதே உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் பட்டா மாறுதல் செய்வதற்காக ஆவணங்களை தேடினேன், கிடைக்கவில்லை. 2017ம் வருடம் நாங்கள் தேடி பார்த்த போது நாகராஜ் பெயரில் பட்டா தாக்கலாகி உள்ள விபரம் தெரிய வந்தது. இது சம்மந்தமாக 2018ம் வருடம் 1ம் பிரதிவாதியிடம் நான் கேட்டதற்கு தாம் பவர் பத்திரம் மூலம் சொத்தினை கிரையம் பெற்றுக்கொண்டதாக சொன்னார். அதன் பிறகு பத்திர அலுவலகத்திற்கு சென்று 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை வாங்கி பார்த்தேன். மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு கிரையம் எழுதிக்கொடுத்த பவர் ஏஜெண்டிடம் கேட்ட போது சுப்பாநாயக்கர் வாரிசுகளிடம் இருந்து பவர் பத்திரத்தை வாங்கியதாக சொன்னார். யூடிஆர் பதிவுகளை பார்த்த போது பவர் எழுதி கொடுத்த நபர்கள் பெயரில் பட்டா தாக்கலாகவில்லை. யூடிஆர் பதிவு நகலை இவ்வழக்கில் நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எனக்கு எதிராக மேற்படி ஆவணம் உள்ளதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. யூடிஆர் ஆவணத்தை பார்த்த போது கோபால்நாயக்கர் மற்றும்

கு.ராமசாமி நாயக்கர் பெயரில் தாக்கலாகி உள்ளது தெரியவந்தது. எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் கூடாண்டி நாயக்கர். எனது தகப்பனார் கிரையம் பெற்றுள்ள சீனி நாயக்கர், குருசாமி நாயக்கரின் முன்னோர் தான் கு.ராமசாமி நாயக்கர். மேற்படி சீனி நாயக்கர் மற்றும் குருசாமி நாயக்கருக்கும் கு.ராமசாமி நாயக்கருக்கும் என்ன உறவு என்று எனக்கு ஞாபகமில்லை. யூடிஆரில் சொல்லப்பட்டுள்ள ராமசாமிக்கும், எனது தகப்பனார் கிரையம் பெற்ற நபருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தாவா சொத்தின் யூடிஆர் சான்றிட்ட நகல். அது **பி.வா.சா.ஆ. 1** ஆகும். பி.வா.சா.ஆ.1 ல் பட்டா எண்.453 சர்வே எண்.32/3 க்கான நில உடைமையாளர்கள் ராமசாமி நாயக்கர், கோபால் நாயக்கர், நடராஜன் செட்டியார் ஆகியோர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 01.04.1959 ல் நடராஜன் செட்டியார் சுப்பா நாயக்கர் என்பவருக்கு சர்வே எண்.32/3 பழைய பைமாஸ் எண்.563/1 புஞ்சை ஏக்கர் 1 செண்ட் 42 ஐ கிரையமா கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. சுப்பா நாயக்கர் இறந்த பிறகு அவரது மகன் வேலுச்சாமி நாயக்கர் மற்றும் வாரிசுகள் வழக்கு சொத்து உட்பட வேறு சொத்துக்களை அய்யனார் செட்டியார் மற்றும் எம்.பாண்டியராஜன் ஆகியோர்களுக்கு 23.06.2008 ம் தேதி பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் 1 ம்பிரதிவாதி வா.சா.ஆ.3 ன் மூலம் சர்வே எண்.32/3 ல் 1 ஏக்கர் 42 செண்டை கிரையமாக பெற்று அவரது பெயரில் பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ன் மூலம் தாவா சொத்து உட்பட மொத்தம் 5 அயிட்ட சொத்துக்களை சரியான பிரதிபிரயோஜனத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. நான் பிராதில் சொல்லியுள்ளபடி 1 ஏக்கர்

70- செண்ட் பூமியில் உள்ளதா என்றால் உள்ளது. அதற்கான சர்வே வரைபடம் மற்றும் கிராம புல வரைபடம் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இதுவரை சர்வே எண்.32/3 ஐ நான் அளந்து பார்க்கவில்லை. பிராது சொத்தின் நான்குமால்களில் கூறப்பட்டுள்ள நிலங்களின் தற்போது உரிமையாளர்கள் பெயர் தெரியும். 2020 ம் ஆண்டில் இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்கு சொத்தின் நான்குமால் உரிமையாளர்கள் பெயர் தெரியும். சொத்து விபரத்தின் நான்குமாலில் சொல்லப்பட்டுள்ள நபர்கள் தற்போது உயிருடன் இல்லை. வடக்கு மாலாக சொல்லப்பட்டுள்ள ராஜம்மாளின் வாரிசுகளாக கணேசன் மற்றும் நான்கு நபர்கள் தாவா சொத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள். மேற்படி நபர்களை நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். மற்ற மால்களின் சொத்துக்களுக்கு உரிமையாளர்கள் பெயர் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்திற்கு வடக்கே பட்டம்புதுார் கிராம எல்லை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொததின் கிழமேல், தென்வடல் அளவுகள் சொத்து விபரததில் சொல்லப்படவில்லை. நான் சொன்னது போல் தாவா சொத்து பூமியில் இல்லாததாலும், நான் அனுபவத்தில் இல்லாததாலும், நான்கு மால்கள் மற்றும் விஸ்தீரணம் தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொத்து விபரங்களை முழுமையாக இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி பூமியில் உள்ள சொத்தை சரியான நபரிடம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் விவசாயம் செய்வதற்கு அரசிடம் காப்பீடோ, திட்ட உதவியோ பெறவில்லை என்றால் சோளம் பயிர்

**செய்வதால் எனக்கு கிடைக்கவில்லை. வச்சக்காரப்பட்டி கிராம கணக்குகளில் என் பெயரில் தாவா சொத்திற்கான பயிர் சாகுபடி விபரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை.அவ்வாறு என் பெயரில் பயிர் சாகுபடி பதிவு செய்யப்படவில்லை என்பதால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.**